DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆகாஷ் |
| Father / Husband Name | முருகேசன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.09.2025

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. என்னுடைய செல்போனில் பதிவாகியிருந்த வீடியோவை நான் போலிசாரிடம் ஒப்படைத்துவிட்டேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. புகாரை நான் 01.07.2024 அன்று மதியம் சுமார் 1முதல் 2மணியளவில் கொடுத்தேன். புகாரை காவல் ஆய்வாளர் வாங்கினார். யுகேஷ்குமார் வண்டி ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்று போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். 1வது எதிரி அவரது இருசக்கர வாகனத்தில் எங்களை ஏற்றிச்சென்றார் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். எங்கள் இருவரையும் ஹெமெட்டால் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அதற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை.

3. என்னுடைய போனில் வீடியோ எடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் செல்போனை பிடுங்கி கொண்டு எங்களை அனுப்பிவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நாங்கள் சென்றுவிட்டோம் எதிரிகள் அங்கு தான் இருந்தார்கள். போலிசார் என்னை 1 முதல் 2 மணியளவில் விசாரணை செய்தார்கள். பின்னர் சம்பவ இடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். சம்பவ இடத்திற்கு அழைத்துச்சென்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடைய செல்போன் வாங்கிய ரசீது, என் நண்பரின் நகை வாங்கிய ரசீது ஆகியவற்றை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மோதிரத்தின் மாடல் என்ன என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை, செல்போன் மாடல் பற்றி தான் சொன்னேன்.

4. அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடம் மக்கள் நடந்து செல்லக்கூடிய பகுதி என்றாலும், வாகனங்கள் செல்லும் இடம் என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறும் நேரம் இரவு நேரம் என்றால்

சரிதான். அப்போது பொதுமக்கள் யாரும் இல்லை. திரும்ப போகும்போதும் யாரும் இல்லை. அன்றைய தேதியில் நான் யாரையும் பார்க்கவில்லை. பட்டியல் சாட்சிகள் 3 முதல் 9 வரையிலான சாட்சிகள் யார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் எந்த வகையான கத்தியை கழுத்தில் வைத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அதன் அளவுகளை சொன்னேனா என்றால் சொன்னேன். அளவு என்ன என்றால் கையளவு இருக்கும். நான் கத்தியின் அளவுகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. என்னுடைய செல்போனை நான் நீதிமன்றத்தில் தான் மனுதாக்கல் செய்து வாங்கினேன். நாங்கள் செல்போனை திரும்ப பெரும்போது அதன் ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் ஏரிக்கரையில் தான் நடந்தது, அந்த இடத்தில் கரம்பாக இருக்கும். சம்பவ இடம் ஏரிக்கரை இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவம் ஏரிக்கரையில் நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நான் யுகேஷ்குமார், அவருடைய உறவினர்கள் என 5 முதல் 6 பேர் சென்றோம். அந்த உறவினர்களின் பெயர் எனக்கு தெரியாது. வீடியோ இருப்பது உண்மை என்றால் போலிசார் விசாரிக்கும்போதே அதை கொடுத்திருப்பேன் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. புகாரை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் காவலர் தான் எழுதினார். நான் அதில் கையொப்பம் செய்தேன். நான் கொடுத்த புகாரில் தேதி போட்டிருந்ததா என்றால் போட்டிருந்தது. அ.சா.ஆ 1ன் புகாரில் தேதி இல்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக கூறும் புகார் வேறு புகார் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்களே தயார் செய்த புகாரில் நான் கையொப்பத்தை மட்டும் போட்டு அதற்கு ஏற்றார்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் புள்ளிவிவரத்திற்காக போட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

7. சம்பவம் நடந்த நேரத்தை போலிசார் விசாரணையிலும், என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த வாகனத்தில் வந்தோம், அதன் பதிவு எண் என்ன போன்ற எந்த விவரத்தையும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் போலிசாரிடம் புகார் கொடுக்கும்போது எதிரிகள் எடுத்ததாக கூறும் வீடியோவை போலிசாரிடம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த வீடியோவை ஆஜர் எதிரிகளின் முகம் தெரியவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்த வீடியோவும் எடுக்கவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதால் தான் நானே வீடியோவை எடுத்து அதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் புள்ளிவிவரத்திற்காக போட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | யுகேஷ்குமார் |
| Father / Husband Name | ராமதாஸ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.09.2025

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது தினியாம்பூண்டி கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி ஆகாஷ் என்பவரை தெரியும். கடந்த 30.06.2024 ம் தேதி காலையில் நானும் ஆகாஷ் என்பவரும் மறைமலை நகரில் உள்ள எனது கம்பெனிக்கு எனது பல்சர் இருசக்கர வாகனம் எண். TN 97 W 3373 என்ற வாகனத்தில் வேலையை முடித்துவிட்டு கரிக்கிளியில் உள்ள என் நண்பர் அருணாச்சலம் வீட்டிற்கு சென்றோம். அப்போது கரிக்கிளி ஆர்ச் அருகே மாலை 6.30 மணிக்கு சென்ற போது வெள்ளை கலர் NS Pulsar இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் வந்து எங்கள் வண்டியை மடக்கி மிரட்டினார்கள். ஆஜர் எதிரி விஜயபாரதி எங்களை பார்த்து தேவிடியா பசங்களா நீங்கள் எந்த ஊரு என்று கேட்டு அசிங்கமாக பேசினார். அதற்கு ஆகாஷ் ஏன் இப்படி பேசுறீங்க என்று கேட்டதற்கு கையால் எங்களை அடித்து கத்தியை காட்டி என்னுடன் வரவில்லை என்றால் உங்களை வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார்கள்.

2. ஆஜர் எதிரி சந்துரு என்னுடைய இருசக்கர வாகனத்தில் அமர்ந்துக்கொண்டு எதிரி விஜயபாரதி ஓட்டும் இருசக்கர வாகனத்தின் பின்னால் செல்லச்சொன்னார். எங்களை ஒரு ஏரிக்கரை அருகே எங்களை முட்டிபோட வைத்து அடித்து எனது கால் சவரன் தங்க மோதிரம், கவரிங் செயின், ஆகாஷ்-ன் செல்போனை பிடுங்கி வைத்துக்கொண்டு எங்களை முட்டிபோட வைத்து ஆகாஷ் செல்போனில் எதிரி விஜயபாரதி எங்களை கஞ்சா விற்றோம் அதனால் அவர்கள் இருவரையும் மடக்கி பிடித்ததாக சொல்லச்சொல்லி வீடியோ எடுத்தார். நாங்கள் அவர்களிடம் எங்களை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினோம். அதற்கு எதிரி விஜயபாரதி புகார் கொடுத்தால் இந்த வீடியோவை காண்பித்து ஈசியாக வெளியே வந்துவிடுவோம் என்று கூறினார். நாங்கள் உயிருக்கு பயந்து வந்துவிட்டோம். அதன்பின்னர் நானும் ஆகாஷ் என்பவரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 01.07.2024 ம் தேதி மாலை 6.30 போலிசார் எதிரிகளை பிடித்துவிட்டோம் என்று சொன்னார்கள். நாங்கள் காவல் நிலையம் சென்றபோது எதிரி விஜயபாரதி இருந்தார்.

3. காவல் நியைத்தில் எதிரியிடம் இருந்து செல்போன், மோதிரம், செயின் ஆகியவற்றை மீட்டு வைத்திருந்தார்கள், அதை நாங்கள் அடையாளம் காட்டினோம். என்னுடைய மோதிரத்தையும் செயினையும் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து வாங்கிக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மோதிரமும், செயினும் என்னுடையது தான். **(அந்த மோதிரமும், செயினும் சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. நான் வேலைக்கு சென்று திரும்ப வரும்போது சம்பவம் நடந்ததாகவும், என்னுடைய நண்பர் அருணாச்சலத்தை பார்க்க கரிக்கிளி கிராமத்திற்கு சென்றதாகவும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நானும் என் நண்பரும் எங்களுடைய ஊரில் இருந்து புறப்பட்டு தச்சூரில் உள்ள நண்பரை பார்க்க சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பது தவறா என்றால் அவர் ஆகாஷின் நண்பர் எனக்கு 2, 3 நாள் தான் பழக்கம், அவரது ஊர் எது என்று எனக்கு தெரியாது, நான் ஆகாஷ் உடன் சென்றேன். சந்துரு என்னுடைய பைக்கில் வந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். ஆகாஷ் செல்போனில் வீடியோ எடுத்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். புகாரை நாங்கள் இருவரும் கொடுத்தோம், அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். அந்த புகாரை காவல் நிலையத்தில் எழுதினார்கள், எழுதியவர் யார் என்று எனக்கு தெரியாது.

5. நாங்கள் சொன்னதை அவர் எழுதிக்கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. இந்த புகார் நாங்கள் கொடுத்த புகார் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றேன். எதிரிகளை நான் பார்க்கவில்லை. எதிரிகளின் பெயர் போலிசார் சொல்லி தெரியும் என்றால் இல்லை, மறுநாள் நெல்வாய் கூட்ரோடு அருகே இருந்த நபர்களிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேன். புகார் கொடுக்க காவல் நிலையம் மதியம் 12.00 முதல் 1.00 மணியளவில் சென்றோம். போலிசார் எங்களை புகார் கொடுத்து சுமார் அரை மணி நேரம் கழித்து விசாரித்தார்கள். அப்போது சுமார் நேரம் சுமார் 1.30 மணி இருக்கும். அதன்பிறகு போலிசார் எங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை. 6.30 மணியளவில் விஜயபாரதியை காவல் நிலையத்தில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

6. நான் காவல் நிலையம் சென்று பார்க்கும்போது செல்போன் மற்றும் நகைகளை ஏற்கெனவே போலிசார் மீட்டு வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய மோதிரத்தின் ரசீதோ அல்லது மாடலை காட்டக்கூடிய ஆவணத்தையோ போலிசாரிடம் காட்டினேனா என்றால் காட்டினேன். நீதிமன்றத்தில் இருந்து நகையை பெறும்போது அதன் ரசீது தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் காவல் நிலையத்தில் சொன்ன நகையின் அளவும் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்ட நகையின் அளவும் வெவ்வேறானது என்றால் சரியல்ல, ஒரே மோதிரம் தான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், எதிரிகள் பற்றிய விவரங்கள் போலிசார் சொல்லிதான் தெரியும் என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

7. மேலே கண்ட குறுக்கு விசாரணையை 2 ம் எதிரி தரப்பு ஏற்றுக்கொண்டது.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for
**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சரவணன் |
| Father / Husband Name | மாசிலாமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.09.2025

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது கொலத்தூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 30.06.2024 ம் தேதி இரவு 7.00 மணிக்கு நெல்வாய் கூட்ரோடு வழியாக சென்று கரிக்கிளி ஆர்ச் வழியாக நடந்து வந்தபோது ஆஜர் எதிரிகள் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். அவர்கள் பின்னால் வந்த இரு நபர்கள் என்னிடம் முன்னால் இருசக்கர வாகனத்தில் சென்ற இருநபர்கள் எங்களிடம் கத்தியை காட்டி செல்போன் செயினை பரித்து சென்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள் என்றால் இல்லை. அப்போது நான் அந்த நபர்களிடம் எதிரிகள் இருவரும் கத்தியை காட்டி பணம் பரிப்பது வழக்கம் என்று சொன்னேனா என்றால் இல்லை. மேற்சொன்ன விவரத்தை போலிசாரிடம் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பெருமாள் |
| Father / Husband Name | நாகப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.09.2025

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது உத்திரமேரூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி பிரதாப் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அசா4 ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 முதல் 4ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 6 மாதத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணியளவில் நானும் பிரதாப் என்பவரும் கரிக்கிளி சாய்பாபா கோவில் வழியாக சென்றபோது போலிசார் அங்கு கும்பலாக இருந்தார்கள், அங்கு என்ன என்று பார்த்தோம். எதிரி விஜயபாரதி போலிசாரிடம் கத்தி, செயின், மோதிரம் ஆகியவற்றை எடுத்துக்கொடுத்தார். அதன்பிறகு போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார். நான் கையொப்பம் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. 6 மாதத்திற்கு முன்பு போலிசார் என்னை விசாரித்த வழக்கிற்கு தான் சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு போலிசார் அழைப்பாணை கொடுத்தார்களா என்றால் இல்லை, மதுராந்தகம் போலிசார் வரச்சொன்னதால் வந்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். புகார்தாரர் எனக்கு உறவினர்கள் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் கையொப்பம் செய்தேன் என்றாலும், நான் சாட்சி சொன்ன வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. மேலே கண்ட குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பு ஏற்றுக்கொண்டது.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சங்கர் |
| Father / Husband Name | முனுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.09.2025

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது கொலத்தூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி மகி என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா5 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணிக்கு நானும் மகியும் வேலை முடித்துவிட்டு வரும்போது கரிக்கிளி ஆர்ச் அருகே போலிசார் கூட்டமாக இருந்தார்கள். அங்கு சென்று பார்த்தபோது போலிசார் கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் கையொப்பம் போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிஸ் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. மேலே கண்ட குறுக்கு விசாரணையை 2 ம் எதிரி தரப்பு ஏற்றுக்கொண்டது.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | மகி |
| Father / Husband Name | ஏகாம்பரம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.09.2025

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது கரிக்கிளி கிராமத்தில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். சாட்சி சங்கர் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா6 ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 5 மாதத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 முதல் 5.00 மணிளயவில் நானும் சங்கரும் வேலை முடித்துவிட்டு வரும்போது கரிக்கிளி ஆர்ச் அருகே போலிசார் கூட்டமாக இருந்தார்கள். அங்கு சென்று பார்த்தபோது போலிசார் கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் கையொப்பம் போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிஸ் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. மேலே கண்ட குறுக்கு விசாரணையை 2 ம் எதிரி தரப்பு ஏற்றுக்கொண்டது.